# மாந்தை கிழக்கு பிரதேச சபை

## முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்விற்காக முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருந்தபோதிலும், அவை 2011 மே 11 ஆந் தியதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மாந்தை கிழக்கு பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மாந்தை கிழக்கு பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம் மற்றும் சொத்துக்கள் என சந்தர்ப்பந்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | நிதிக் கூற்றுக்களுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|
| | வருமானம் | | சொத்துக்கள் | |
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | - | - | 01 | 608,378 |

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

வருமானச் செலவினக் கணக்கிற்கும் வாக்குப் பணப் பேரேட்டிற்குமிடையில் ரூபா 522 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 103,077 ஆக இருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் இல. 1645 | சபையினால் வாகன ஓட்டப்பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) சுற்றறிக்கைகள் | |
| i. 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2010 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் சுட்டிக்காட்டப்பட்ட பாவிக்க முடியாத பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| ii. 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 720,984 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 1,040,670 ஆக இருந்தது.

### 2..2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன. 2009 இல் நிலவிய பதட்ட நிலைமை

காரணமாக முன்னைய ஆண்டிற்கான பாதீடு கபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

| | 2010 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **பாதிடப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **31 திசெம்பரில் திரண்ட நிலுவை** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| குத்தகை வாடகை | 78 | 54 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 225 | 229 | - |
| ஏனைய வருமானங்கள் | 4,171 | 4,256 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணங்கள் வவனியா மாவட்ட நீதவான் நிதிமன்றத்திடமிருந்தும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நிதிமன்றத்திடமிருந்தும் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணங்கள் முல்லைத்தீவு மாவட்ட காணிப்பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வீதவரி மற்றும் வரிகள்

வரி செலுத்துனர்களால் வீத விரிகளை செலுத்துவதற்காக சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 வாடகைகள் மற்றும் குத்தகைகள்

(அ) பண்டியன்குளம் மற்றும் பலினிகர் குளம் சந்தையிலுள்ள வியாபார நிலைய உரிமையாளர்களிடமிருந்து ரூபா 17,000 நிலுவை வாடகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பண்டியன்குளம் மற்றும் பலினிகர் குளம் சந்தையிலுள்ள வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 17,454 குத்தகை பெறப்பட வேண்டியிருந்தது. நிலுவை குத்தகை வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன. 2009 இல் நிலவிய பதட்ட நிலைமை காரணமாக முன்னைய ஆண்டிற்கான பாதீடு கபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

| | 2010 | | |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | **ரூபா '000'** | **ரூபா '000'** | **ரூபா '000'** |
| ஆளுக்குரிய வேதனம் | 3,446 | 3,113 | 333 |
| ஏனையவைகள் | 727 | 706 | 22 |
| **உப மொத்தம்** | **4,173** | **3,819** | **355** |
| **மூலதனச் செலவு** | 300 | 1,894 | 1,594 |
| **முழு மொத்தம்** | **4,473** | **5,713** | **1,839** |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

#### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணித் தரம | 02 | 01 |
| இரண்டாம் மட்டம் | 04 | 03 |
| ஆரம்ப மட்டம் | 10 | 06 |
| மொத்தம் | 16 | 10 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 118,077 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 83,913 ஆகும்.

### 2.5.2 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 490,285 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 5,496 ஆகும்.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் மெய்மையாய்வு/பொருட் கணிப்பீட்டுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 9,188,883 ஆகும்.

## 2.6 இணங்காணப்பட்ட இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

சபையினால் பேணப்பட்ட தகவல்களின் படி கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் ரூபா 1,554,365 பெறுமதியான இழப்புக்கள் மற்றும் சேதங்கள் வெளிப்பட்டன.

## 2.7 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செலவினத்தின் தேவைப்பாட்டினைக் கருத்திற்கொள்ளாது சில நோக்கங்களிற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் உள்ளபடியான செலவினம் மேலதிகமாக காணப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(அ) பாதீடு

(இ) வருமான சேகரிப்பு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்